செ.வெ.எண் : 910 நாள் : 05.12.2017

# கன்னியாகுமரி மாவட்டம்

**மின் சீரமைப்பு பணிகள் போர்கால அடிப்படையில் நடைபெற பல்வேறு மாவட்டங்களிலிருந்து கூடுதல் பணியாளர்கள் பணியமர்த்தம்**

**தமிழ்நாடு மின்வாரியத் தலைவர் திரு.சாய்குமார்,இ.ஆ.ப, அவர்கள் தகவல்**

கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒகி புயலின் எதிரொலியாக 29.11.2017 நள்ளிரவு கடுமையான சூரைக்காற்றுடன் கூடிய கனமழை பெய்ததன் காரணமாக கன்னியாகுமரி மாவட்டத்தில் இதுவரை கண்டிராத கடும் சேதங்கள் ஏற்பட்டது. அதனைத் தொடர்ந்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், ஒகி புயலால் ஏற்பட்ட பாதிப்புகள் மீதான மீட்பு நடவடிக்கைகளை போர்கால அடிப்படையில் மேற்கொள்ள உத்தரவிட்டுள்ளார்கள்.

அதனடிப்படையில் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் இன்று (05.12.2017) ஊரக வளர்ச்சித்துறை அரசு செயலர் திரு.ஹான்ஸ் ராஜ் வர்மா, இ.ஆ.ப., அவர்கள் தலைமையிலான கூட்டத்தில் மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத் தலைவர் திரு. சாய்குமார் இ.ஆ.ப., வேளாண்மைத்துறை அரசு செயலர் திரு.ககன்தீப்சிங் பேடி, இ.ஆ.ப., கண்காணிப்பு அலுவலர் மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை செயலாளர் திரு.டி.கே.இராமச்சந்திரன்,இ.ஆ.ப., அவர்கள், கூடுதல் கண்காணிப்பு அலுவலர் மற்றும் தொழில் துறை ஆணையர் திரு.டி.இராஜேந்திரகுமார் இ.ஆ.ப., அவர்கள், வருவாய்த்துறை செயலாளர் டாக்டர்.பி.சந்திரமோகன் இ.ஆ.ப., அவர்கள், நகராட்சி நிர்வாக ஆணையர் திரு.பிரகாஷ் இ.ஆ.ப., அவர்கள், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை இயக்குநர் திரு.கா.பாஸ்கரன் இ.ஆ.ப, அவர்கள், மீன்வளத்துறை இயக்குநர் திரு.தண்டபாணி இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், முதன்மை வன பாதுகாவலர் திரு. ஹைச். பசவராஜ் இ.வ.ப., அவர்கள் உட்பட அனைத்துத்துறை அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

அவர்களின் உத்தரவின் பேரில், தமிழ்நாடு மின்வாரியத் தலைவர் திரு.சாய்குமார்,இ.ஆ.ப, அவர்கள் தெரிவித்ததாவது:

கன்னியாகுமரி மாவட்டத்தில் புயலால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் சீரான மின்சாரம் விநியோகம் செய்வதற்கு முன்னுரிமையாகக் கொண்டு சீரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதனடிப்படையில், தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மூலம் கன்னியாகுமரி மாவட்டத்தில் 10,500 மின்கம்பங்கள் பழுதடைந்ததில் இதுவரை 7,000 மின்கம்பங்கள் மாற்றப்பட்டுள்ளது. 2 இயக்குநர்கள் மேற்பார்வையயில் 10 தலைமைப் பொறியாளர்கள், 18 கண்காணிப்பு பொறியாளர்கள் மற்றும் பல்வேறு மாவட்டங்களிலிருந்து 5,320 களப்பணியாளர்கள் வரவழைக்கப்பட்டு சீரமைப்பு பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இப்பணிகள் தொய்வில்லாமல் மேற்கொள்ள பணியாளர்களுக்கு தங்கும் வசதி, உணவு, போக்குவரத்துமற்றும் மருத்துவ வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

மேலும் இப்பணிகளை போர்கால அடிப்படையில் மேற்கொள்ள கூடுதலாக தென்மாவட்டங்களிலிருந்து 700 பணியாளர்கள் வருகை தர உள்ளனர். சில கிராமங்களில் புயல் சமயத்தில் சாய்ந்த மரங்களை, அந்தந்த பகுதிகளைச் சார்ந்த ஊராட்சி அலுவலக அலுவலர்கள் ஒருங்கிணைப்புடன் அகற்றி, மின்சார விநியோகம் வழங்குவதற்கான நடவடிக்கைகள் போர்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மறுசீரமைப்பு பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருவதால் விரைவில் மாவட்டம் முழுவதும் சீரான மின்சார விநியோகம் உறுதி செய்யப்படும் என தமிழ்நாடு மின்வாரியத் தலைவர் திரு.சாய்குமார் இ.ஆ.ப, அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி.**